# கலை ஒளிர் விருது

## 2011

## கௌரவம் பெறும் கலைஞர்கள் விபரத்திரட்டு

பிரதேச கலாசாரப் பேரவை,

பிரதேச செயலகம்,

கண்டாவளை,

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலை ஒளிர்" விருது

## 2011

### கௌரவம் பெறும் கலைஞர்கள் விபரத்திரட்டு

பிரதேச கலாசாரரப் பேரவை,

பிரதேச செயலகம்,

கண்டாவளை,

கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலை ஒளிர்" விருது– 2011

## பெறும் கலைஞர்கள் விபரம்

1.திருமதி.கந்தசாமி.ரதிதேவி (தாமரைச்செல்வி)

சிறுகதையாக்கம் (குமரபுரம்)

2.திரு.சி.கு.இராசையா (கண்டவளைக்கவிராயர்)

மரபுக்கவிதை (முரசுமோட்டை)

3.திரு.காசிப்பிள்ளை.பாலேஸ்வரன் (காசிமணியம்)

பல்துறை (கண்டாவளை)

4.திரு.மரியாம்பிள்ளை.றோமியஸ்

நாடகத்துறை (தருமபுரம் கிழக்கு)

5.செல்வி.முருகேசு.நடனவதி

இசைத்துறை (தருமபுரம் மேற்கு)

6.திரு.வி.வேலாயுதப்பிள்ளை

கூத்து (கண்ணகி நகர்)

7.திரு.முருகர்.குணபாலசிங்கம்

கூத்து (கண்ணகி நகர்)

8.திரு.சின்னத்தம்பி கனகராசா

ஆமோனியம் (கண்டாவளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றும் வாழும் நாயகர்களாக...**

கண்டாவளைப்பிரதேசத்தில் கலையுணர்வினையும் படைப்பாக்கத் துறைகளிலும் தம் வாழ்நாளில் சேவையாற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கும் கலைஞர்களின் சேவை போற்றத்தக்கது. தம் வாழ்வில் பெரும் பகுதியை கலை சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்களே உண்மையான கலைஞர்கள் ஆகின்றனர்.

இவர்கள் பிரதேசத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுள் எண்மரை எமது பேரவையும் பிரதேச செயலகமும் 2011ம் ஆண்டிற்கான கலாசார விழாவின் போது "கலை ஒளிர்" 2011 விருதினை வழங்கி கௌரவிப்பதனூடாக அவர்களது கலைச்செயற்பாட்டை பிரதேசத்தில் தொடர்ந்து பேணவும் முன்னுரிமைப்படுத்தவும் ஓர் உந்துதலாக அமையும் என எதிர்பார்க்கிறது.

இக் கலைஞர்களின் சேவைகள் தொடர்ந்து எமது பிரதேசத்தில் கிடைக்கவும் அவர்கள் பல விருதுகளைப் பெற்று சிறப்புற என்றும் வாழவும் கலைஞர்களாகத் திகழவும் மனதார வாழ்த்துகின்றோம்.

பிரதேச கலாசாரபேரவையும்

பிரதேசசெயலகத்தினரும்,

கண்டாவளை,

கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி.கந்தசாமி ரதிதேவி**
**(தாமரைச்செல்வி)**
**(சிறுகதையாக்கம்)**



சிறுகதையாக்க படைப்பாளியான இவர் குமரபுரத்தில் 1953.08.04 இல் பிறந்தவர். ஆரம்பகல்வியை பரந்தன் இந்துவிலும் இடைநிலைக் கல்வியை யாழ்/இந்து மகளீர் கல்லூரியிலும் பெற்றவர். 1973களில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளுக்காக எழுதத்தொடங்கியவர். இவரது முதலாவது சிறுகதையான "ஒரு கோபுரம் சரிகிறது." வீரகேசரியில் 1974இல் வெளிவந்தது. இதுவரை சுமார் 200 சிறுகதைகளை எழுதிக் குவித்துள்ளார். அந்தவகையில் "எங்கேயும் எப்போதும்," "இங்கேயும் சில இழப்புக்கள்,""ஒரு மழைக்கால இரவு", "இடைவெளி", "ஓர் உயிரின் விலை", போன்றவை சிறப்பானவை.

இவரது சிறுகதைகள் வீரகேசரி, சிந்தாமணி, தினகரன், ஈழமுரசு, முரசொலி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் மல்லிகை, சிரித்திரன், சுடர், களம், நாற்று, தாரகை, ஆதாரம், போன்ற சஞ்சிகைகளிலும் ஐரோப்பிய சஞ்சிகைகளான பரிஸ்ஈழநாடு, பரிஸ்முரசு, களத்தீ(London) போன்றவற்றிலும் வெளிவந்துள்ளன. இவரது நான்கு சிறுகதைகள் ஆங்கில மொழிப் பெயர்ப்பாக்கத்திலும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது குறுநாவல்களில் "அவர்கள் தேவர்களின் வாரிசுகள", கலா வெள்ளி (கொழும்பு) சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. இவரின் நாவலான "விண்ணில் அல்ல விடிவெள்ளி" 1997ல் மீரா வெளியீடாக வந்ததுடன் யாழ் இலக்கிய பேரவையின் பாராட்டு பரிசையும் பெற்றது. 2003இல் "வீதியெல்லாம் தோரணங்கள்" வடக்கு கிழக்குமாகாண சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றதுடன் இவரது "பச்சை வயல்கனவு" (2004) நாவலுக்கு அரச சாகித்திய விருதும் கிடைத்துள்ளது. இவரது சிறுகதைத் தொகுப்புக்காக பல்வேறு காலங்களில் மொத்தம் 09 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இவரது நீண்ட கால சிறுகதைப் படைப்பாக்கப் பணிக்காக 2001இல் "ஆளுநர் விருதும்", 2002இல் கிளிநொச்சித் தமிழ்ச்சங்கத்தின் "இலக்கிய மணி" பட்டமும், இலங்கை கலைக்கழகத்தின் (கொழும்பு) சிறந்த கலை இலக்கிய செயற்பாடுகளுக்கான விருதும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் எமது கலாசாரபேரவையும் 2011 இன் "கலை ஒளிர்" விருதினை வழங்குவதனூடாகப் பெருமை பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.சி.கு.இராசையா**
**(கண்டாவளை கவிராயர்)**
**(மரபுக்கவிதை)**



எமது செயலக பிரிவின் முரசுமோட்டை கிராமத்தில் வாழ்ந்து வரும் இவர் 1928.05.15 ஆம் திகதியில் கண்டாவளையில் பிறந்தவர். "கண்டாவளை கவிராயர்" எனும் புனைபெயரில் மரபு கவிதை ஆக்கத்துறையில் காலடி வைத்தவர். இயற்கை வர்ணனைகள்,தெய்வீகம், பிரதேசவளங்களின் சிறப்புக்களையும் தனது கவிதைகளின் பாடுபொருளாகக் கொண்டு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வந்தவர். இவரது முதல் படைப்பாக்கம் 1978ஆண்டு கண்டாவளை கோணங்குளம் விநாயகர் ஆலயம் மீது பாடப்பட்ட பதிகமாகும். இதுவரை சுமார் 25 வரையிலான கவிதை தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். கந்தகோட்ட மாண்மியம், கரைச்சிப்பள்ளு போன்றவை குறித்தற்குரியன. "கந்த கோட்ட மாண்மியம்" எனும் நூல் இலங்கை அரசின் சாகித்திய விருதைப் பெற்றது.

இவரது துறைசார் சேவைக்காக ஆளுநர்விருது, கலாபூசண விருது, கவிமணி விருது, கலைக்கிளி விருது (2011) ஆகிய பல விருதுகள் கிடைத்துள்ளமை தக்க சான்றாகும். இவரது உன்னதக் கலைச்சேவையைக் கௌரவிக்கும் வகையில் கண்டாவளை பிரதேச கலாசார பேரவை 2011ஆண்டின் "கலைஒளிர்" விருதை வழங்கி பெருமைகொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.காசிப்பிள்ளை பாலேஸ்வரன்**

**(காசிமணியம்), (பல்துறை)**



1962.12.29இல் பிறந்தது முதல் எமது கண்டாவளை பிரதேசத்தின் கூகை மாவடியில் வசித்து வருகின்றார். நாடகம், விவாதம், சிறுகதையாக்கம், கவிதையாக்கம், விமர்சனம் எனப் பல்துறை புலமையாளராக விளங்குகிறார்.

1980களில் "உண்மையே உன் விலை என்ன?" எனும் நாடகத்தில் நடித்தது முதல் இவரது பணி ஆரம்பமாயிற்று. சுமார் 100க்கு மேற்பட்ட அமரர்களுக்கான கல்வெட்டுக்களை யாத்துள்ளார். சுட்டிபுரம் கண்ணகி கலையரங்கில் 1982களில் "சட்டத்துக்கு ஓர் சவால்" எனும் நாடகத்தையும் எழுதி நெறியாள்கை செய்தும் நடித்தும் பாராட்டுக்களைப் பெற்றவர். கண்டாவளை முத்தமிழ் கலாமன்றம் 2008 இல் தமிழ் விழா நடத்திய காலப்பகுதியில் மன்றத்தின் போசகராகச் செயற்பட்டவர்.

வன்னியில் இடம் பெற்ற 2009இல் குழப்பசூழலில் சிக்குண்டு கண்பார்வையை இழந்த போதும் தன்னாலான கலைச் சேவையை ஆற்றி வரும் இவரை எமது பேரவையும் 2011 ஆண்டிற்கான "கலை ஒளிர்" விருதை வழங்கி பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.மரியாம்பிள்ளை றோமியல்**
**(நாடகத்துறை)**



தருமபுரம் மேற்கை சேர்ந்த றோமியல் அவர்கள் 1968.07.28 திகதி புங்குடுதீவில் பிறந்தார். தற்போது தருமபுரம் கிழக்கை வதிவிடமாகக் கொண்ட அவர் பாடசாலை ஆசிரியராக சேவையாற்றி வருகிறார். ஏழு வயதில் "யூலியர் சீசர் "நாடகத்தில்1980 களில் உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையில் நடித்தது முதல் இவரது கலைப்பயணம் ஆரம்பமாயிற்று.

இதுவரை சுமார் 100 வரையிலான கிறிஸ்தவ, சமூக, நவீன வகை நாடகங்களையும் "ஞானசௌந்தரி" கூத்தினையும் பல தடவை நெறியாள்கை செய்துள்ளார். அவற்றுள் "நியாயமான கதை கேளு", "பொறுத்தது போதும்", "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு", "பண்டாரவன்னியன்" (1992) போன்ற நாடகங்கள் இவருக்கு சிறப்பைத் தேடி தந்தவை. கிளிநொச்சி மாவட்ட கத்தோலிக்க இளைஞர் மன்றம் நடத்துகின்ற கலைத்துறைசார் பாசறைகளில் பிரதான வளவாளர்களில் ஒருவராக செயற்பட்டு வருபவர்.

மது ஒழிப்பு விழிப்புணர்வு ஆற்றுகை நிகழ்வுகள், சுனாமியின் பின்னரான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் போன்றவற்றை கிளிநொச்சி மாவட்ட Y.M.C.A யுடன் (Youth Club) இணைந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிகழ்த்திய ஆற்றுகைக் குழுக்களில் பிரதான இடம் பெற்றவர். இவர் "பாதுகாவலன்" சஞ்சிகையின் ஊடகவியலாளராகவும், நாடகதுறைசார் ஆசிரிய வளவாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

தர்மபுரம் பரி. லூக்கா தேவாலய 2005ம் ஆண்டின் ஒளிவிழாவின் போது அருட்தந்தை டானியல் அவர்களால் "கலைக்கோ" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக் கலைஞனுக்கு எமது கலாசார பேரவையும் 2011ம் ஆண்டின் கலை ஒளிர் விருதினை வழங்கி பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி.முருகேசு நடனவதி**
**(இசைத்துறை)**



தருமபுரம் கிழக்கை தன் எட்டு வயதிலிருந்து வசிப்பிடமாக கொண்ட இவர் 1953.07.15 அனுராதபுரத்தில் பிறந்தார். ஓய்வ பெற்ற இசைத்துறை ஆசிரியரான இவர் தனது சேவைக்காலத்தில் இசைத்துறைசார் நிகழ்வுகளை நெறியாள்கை செய்தும் துறைசார் போட்டிகளில் பங்குபற்றியும் மாணவர்களை நெறிப்படுத்தியும் வந்த புகழ் பூத்த இசையாசிரியராவார்.

இவர் வட இலங்கை சங்கீதசபையின் சகல தர பரீட்சைகளிலும் முதன்மைச்சித்தியும் இசைத்துறையில் டிப்ளோமா உயர் கற்கை நெறியையும் பூர்த்திசெய்ததுடன் இசைத்துறை சார் ஆசிரியர்களுக்கான வான்மை விருத்தி கருத்தரங்குகள் பலவற்றில் வளவாளராக செயற்பட்டும் உள்ளார். இராமநாதன் கல்லூரியில் உயர் டிப்ளோமா கற்கை நெறியை கற்ற காலத்தில் (1974 1977) திருகேதீஸ்வர திருவிழாக்கால பண்ணிசை குழுவின் பிரதான உறுப்பினராகவும் விளங்கியவர்.

தருமபுரம் முத்துவிநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை ஆசிரியராக சேவை புரிந்து பண்ணிசை வகுப்புக்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் என்பவற்றை இலவசமாக அர்ப்பணிப்புடன் பிரதேச மாணவர்களுக்கு வழங்கி வந்தவர். எமது பிரதேசத்தில் நீண்டகாலம் இசைதுறைக்காக சேவையாற்றிய இவரை பிரதேச கலாசார விழாவின் 2011ஆண்டின் "கலைஒளிர்" விருதுகளை வழங்கிக் கௌரவிப்பதில் கலாசார பேரவை பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.வினாசித்தம்பி வேலாயுதப்பிள்ளை**
**(அறக்கூத்து)**



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் தட்டுவன் கொட்டி கிராமத்தில் 1932.02.07 பிறந்த இக்கூத்து கலைஞர் கண்ணகிநகர், புன்னைநீராவியில் வசித்து வருபவர். தனது 12வது வயதிலேயே கூத்து, நாடகம் போன்றவை நடிப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கியதுடன் இத் துறையில் முதலில் "சத்தியவான்" பாத்திரம் ஏற்று நடித்தவர். தட்டுவன் கொட்டி கண்ணகியம்மன் ஆலய உற்சவ, பங்குனி பெரும் பொங்கல் காலங்களில் அறக்கூத்துக்களான காத்தவராயன், அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, கோவலன் கண்ணகி, போன்றவற்றில் முதன்மை பாத்திரங்களை அலங்கரித்த முதுகலைஞராக திகழ்கின்றார். அக்கலாமன்ற ஆரம்பகால உறுப்பினராகவும் திகழ்ந்தவர், இவரது 50 வருடங்களுக்கு மேற்பட்ட கூத்துச் சேவையைப் பாராட்டும் வகையில் 2010 ஆண்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கௌரவ ஆளுநர் விருது வழங்கப்பட்டமை தக்க சான்றாகும்.

இக்கலைஞனுக்கு எமது பிரதேச கலாசார பேரவையும் 2011 ஆண்டின் "கலைஒளிர்" விருதை வழங்கி பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.முருகர் குணபாலசிங்கம்**

**(கூத்து)**



தட்டுவன் கொட்டியில் 1943.04.06 ஆம் திகதி பிறந்த இக்கலைஞர் கண்ணகி நகரை வசிப்பிடமாகக்கொண்டவர். சிறுவயதில் S.R சின்னத்தம்பி, கிறிஸ்தோப்பர் (குருநகர்) அண்ணாவி போன்றோரின் மாணவராக நாட்டுக்கூத்துக்களை பயின்றவர். பிரதேசத்தின் கோயில்களில் நேர்த்திக்காகவும் திருவிழாக் காலங்களிலும் கோவலன் கண்ணகி, காத்தவராயன், அல்லிஅர்ச்சுனா, பவளக்கொடி, பதிபத்தி போன்ற கூத்துக்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்ததுடன் நெறியாள்ளையிலும் ஈடுபட்டவர். இவரது கலைச் சேவைக்காக 2011ஆண்டின் கிளிநொச்சி மாவட்ட "கலை கிளி" விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டையக்கூத்துக்களை வளர்ப்பதற்காக பாடுபட்ட இவரது சேவையை கௌரவிக்கும் வகையில் எமது பேரவையும் 2011 ஆண்டின் "கலைஒளிர்" விருதை வழங்கி பெருமையடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.சின்னத்தம்பி.கனகராசா**
**(ஆர்மோனியம்)**



கண்டாவளை ஆஸ்பத்திரியடியை வசிப்பிடமாகக் கொண்ட இக் கலைஞர் 1955.06.15 ஆம் திகதி வறணியில் பிறந்தவராவார். இவரது விரல்கள் மீட்டும் இசைஒலியில் பிரதேசத்தின் பாடசாலைகள் ஆலயங்களில் இடம்பெறும் அதிகமான கூத்து, கலை நிகழ்வுகள் செழுமை பெற்றமை குறித்தற்குரியது. ஆர்மோனியம், ஓர்கன், மலோடிக்கா, எக்கோடியன் என சகலவிதமான கட்டை வாத்தியங்களையும் வாசிக்கும் திறமையுடன் வாய்ப்பாட்டு கலைஞராகவும் விளங்கி வருகிறார். இவர் துறைசார் கல்வியை அச்சுவேலியைச் சேர்ந்த ஆர்மோனிய வித்துவான் 'பிலிப்' அவர்களிடமும் ஜோன் ஹவாஸ் அவர்களிடம் பெற்றுக் கொண்டவர். கண்டாவளை முத்தமிழ் மன்றத்தின் ஆரம்பகால உருப்பினருள் ஒருவராக விளங்கும் இவர் காத்தவராயன், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா போன்ற அறக்கூத்துக்களின் பிரதான ஆர்மோனியக்கலைஞராகவும் பக்கப்பாட்டுக்காரராகவும் நீண்ட காலம் செயற்பட்டு வருபவர்.

இவரது கலைச் சேவைக்கு கிளிநொச்சி மாவட்டத்தின் 2011ஆம் ஆண்டிற்கான "கலை கிளி"விருது கிடைத்தமை தக்கசான்றாகும். இத்தகு கலைஞரை எமது பிரதேச கலாசார விழாவில் 2011 ற்கான "கலை ஒளிர்" விருதினை வழங்கிக் கௌரவிப்பதில் கலாசார பேரவை பெருமிதம் அடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமரைச்செல்வி
(சிறுகதை)



கண்டாவளை கவிராயர்
(மரபுக்கவிதை)



காசிமணியம்
(பல்துறை)



ம.றோமியல்
(நாடகம்)



செல்வி மு.நடனவதி
(இசை)



வி.வேலாயுதபிள்ளை
(கூத்து)



மு.குணபாசிங்கம்
(கூத்து)



சீ.கனகராசா
(ஆர்மோனியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eeswaa Digital Press 021 222 0233